RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s22224

OPEN ACCESS

# திருமுருகாற்றுப்படை சுட்டும் வழிபாட்டுமரபுகள்

**ச. கண்ணம்மாள் [அ, *], க. புவனேஸ்வரி [அ]**

[அ] தமிழ்த்துறை, தேசியக் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), திருச்சிராப்பள்ளி- 620001, தமிழ்நாடு, இந்தியா

# The Liturgical Traditions in Thirumurukatrupadai

**S. Kannammal [a, *], K. Bhuvaneswari [a]**

[a] Department of Tamil, National College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: kannammalsugumar@gmail.com

Received: 29.09.2022
Revised: 06-11-2022
Accepted: 10-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Thirumurugatrupadai and Paripadal are the earliest books in the Sangam literature that deals with the Tamil Lord Murugan. Among them is Thirumurukatrupadai is sung by Nakeerar and it explains about lord Murugan's six houses and about the appearance of the lord in different places. The way of worshiping the lord Murugan by the men and servants have been done in many ways. This article summarizes the devotees, cults, rituals, rites and ritualistic worship in detail.

**Keywords:** Thirumurugatrupadai, Worship, Lord Murugan, Devotees

## முன்னுரை

தமிழ்க்கடவுள் என்று அழைக்கப்படும் முருகப்பெருமானைப் பற்றி எடுத்துரைக்கும் சங்க இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்டவை திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும் ஆகும். அவற்றுள் நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை முருகனின் அறுபடை வீடுகள் மற்றும் அங்கங்கே இறைவன் எழுந்தருளியிருக்கும் தோற்றம் குறித்து விளக்குவதாக அமைந்த நூலாகும். இக்கட்டுரை திருமுருகாற்றுப்படையில் சுட்டப்பெறும் வழிபாட்டு விழுமியங்களை ஆராய்வதாக அமைகிறது.

## வழிபாடும் ஆற்றுப்படையும்

வழிபாடு என்னும் சொல்லிற்கு வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, வணக்கம், பூசனை, வழக்கம், சமயக் கோட்பாடு, இறைவணக்கம் என்று அகராதி பொருள் பகரும். மனிதன் தன் ஆற்றலினும் விஞ்சி நிற்கும் ஆற்றலைப் பயத்தின் பொருட்டு வணங்க முற்பட்டான்.

"நிலவு, சூரியன், விண்மீன், ஐம்பெரும் பூதங்கள், ஆறு, கடல், மலை, விலங்கு, மரம், செடி, கொடி, கருவிகள், கல், ஆண், பெண் குறிகள், பாம்பு, தவளை போன்ற பல பொருள்களும் வழிபடு பொருள்களாக இருந்துள்ளன. உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் உலகின் ஏதாவதொரு பகுதியில் யாரோ ஒரு பகுதி மக்களால், ஏதோ ஒரு காலகட்டத்தில் ஏதோ ஒரு காரணத்தால் வழிபடப்பட்டிருக்கும்". ஐம்பூதங்களையும் உயிரினங்களையும் வழிபடத் தொடங்கிய மனிதன் தன்

அறிவுணர்ச்சி காரணமாக தன்னை வழிப்படுத்திக் கொள்வதற்காகவும் மன நிம்மதிக்காகவும் முற்பிறவி பாவங்கள் தீரும் பொருட்டும் முக்தி வேண்டியும் கடவுளை வழிபட்டான்.

வழிபாடு செய்ய வேண்டியதற்கான காரணத்தை ஆராயுங்கால், "மனிதனிடத்தில் குறைபாடுகள் இருக்கின்றன. அக்குறைபாடுகளைப் போக்குவதற்கு மனிதன் தன்னை வழிப்படுத்த முயலல் வேண்டும்" (திரு.வி.க.2022) என்ற திரு.வி.க. அவர்களின் கூற்று சற்றே பொருத்தமுற அமைகின்றது. இங்ஙனம் தன் குறைபாட்டைப் போக்கிக்கொள்ள குற்றமற்ற தனித்துவமான தெய்வத்தை வழிபட முன்னோரின் வழிகாட்டல் இன்றியமையாது வேண்டப்படுகிறது. வழிகாட்டலை 'ஆற்றுப்படுத்தல்' எனலாம்.

"மன்னனின் சிறப்பைப் பாடுவதற்குப் புறநானூற்றில் பயன்படுத்தப்பட்ட ஆற்றுப்படை என்னும் புறப்பாடல் வடிவத்திலிருந்து வளர்ச்சி பெற்ற இலக்கிய வடிவம் முருகனைப் பாடும் 'முருகாற்றுப்படையாக' மாற்றம் பெற்றுள்ளது." (John Samuvel, 1997)

## முருகனின் இருப்பிடம்

திருமுருகாற்றுப்படையில் முருகப் பெருமான் குடிகொண்டுள்ள அறுபடை வீடுகள் முறையே திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்று தோறாடல், பழமுதிர்சோலை என்றவாறு நக்கீரர் வரிசைப்படுத்தியுள்ளார். எனினும் "சுருளிமலை, இலஞ்சி, குன்றக்குடி, திருத்தணி, சென்னிமலை என்ற தலங்களையும் ஐந்தாம் படைவீட்டில் போற்றுகின்றனர்" குன்றுதோறாடல் என்ற பொதுப்பெயர் அநேக இடங்களை உள்ளடக்கியுள்ளது.

எட்டுத்தொகை நூலான பரிபாடலில் திருப்பரங்குன்றத்தை மட்டுமே கடுவன் இளவெயினனார் குறிப்பிடுகின்றார். அறுபடை வீடுகளின்றி விழா கொண்டாடப்படும் இடங்கள், முருகனைப் புகழ்ந்து வழிபடுபவரின் உள்ளம், வெறியாடும் களம், காடு, சோலை, ஆறு, குளம், நான்கு வீதிகள் சந்திக்கின்ற சதுக்கம், சில வீதிகள் சந்திக்கின்ற சந்தி, கடம்ப மரத்தின் அடி, பொதுமன்றம், குறியாக நடப்படும் கந்து (கல்தூண்) இவை போன்ற இடங்களிலும் வீறு பல இடங்களிலும் முருகன் இருப்பான் எனத் திருமுருகாற்றுப்படைகுறிப்பிடுகின்றது.

"ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின் பேரு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்" (திரு.முரு.பா.அடி. 220 - 226)

## வழிபடுவோர்

அறுபடை வீடுகளிலும் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானை தேவ மகளிர், முனிவர்கள், துறவியர்கள், இசைவாணர்கள், கந்தர்வ மகளிர், திருமால், சிவன், இந்திரன் என அனைவரும் வந்து வழிபடுகின்றனர். அத்துடன் மேலே குறிப்பிட்டுள்ள இடங்களை வசிப்பிடங்களாகக் கொண்ட மக்களும் இறைவனை வழிபடுவோர் ஆவர். குறிப்பாக குறவர் குல மக்கள் முருகப்பெருமானைப் உறவுமுறை கொண்டாடி, வழிபட்டு வருகின்றனர்." இலங்கையில் வாழும் ஆதிகுடிகளான வேடுவர்கள் குறப்பெண்ணான வள்ளியின் காதல் கதையை வைத்துக் கொண்டு முருகனைத் தங்கள் மைத்துனன் என்று கூறி இன்றும் வழிபட்டு வருகின்றனர்." (Sarangapani, 2003)

## கூத்து வழிபாடு

மனிதன் தன்னுடைய பக்தி உணர்வை, நன்றியை அவனவனுக்குத் தெரிந்த வகையிலே புலப்படுத்தல் என்பது இயற்கை.

“கோழி ஓங்கிய வென்றுஅடு விறல்கொடி

வாழிய பெரிதென்று ஏத்திப் பலருடன்

சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடி

சூரர மகளிர் ஆடும் சோலை” (திரு.முரு.பா.அடி. 38 - 41)

சூரர மகளிர் என்று சொல்லப்பட்ட அழகான அர மகளிர் முருகனின் கோழிக்கொடியைப் புகழ்ந்து பாடி மகிழ்ச்சியாக ஆடுகின்றனர். இவர்களின் ஆடலும் பாடலும் எதிரொலியாக மலைப்பக்கம் முழுவதும் கேட்பதாக அமைந்துள்ள சோலை என நக்கீரர் குறிப்பிடுவதிலிருந்து, அரமகளிர் ஆடலும் பாடலும் போன்றதொரு கலையின் மூலம் முருகனை வாழ்த்தி வழிபடுகின்றனர் என்ற கருத்து புலப்படுகின்றது.

“வென்றுஅடு விறல்களம் பாடித்தோள் பெயரா

நிணம்தின் வாயள் துணங்கை தூங்க” (திரு.முரு.பா.அடி. 55 - 56)

எண்ணெய் இல்லாத பரட்டைத் தலையும் கோரமான பற்களையும் பெரிய வாயையும் பச்சை நிறக் கண்களையும் காண்போர் அச்சம் கொள்ளத்தக்கதான உருவத்துடன் கூடிய பேய்மகள் தனக்கு நல்விருந்தை வழங்கியுள்ள முருகனைத் ‘துணங்கைக் கூத்து’ ஆடி நன்றி தெரிவித்து வழிபடுகிறாள். போரில் தோற்ற அசுரனின் தலையைக் கிள்ளி எடுத்து, அதன் கண்ணைத் தோண்டி தின்று, அத்தலையைக் கையிலே ஏந்தி முருகனின் வெற்றியைப் பாடி தன் தோளை அசைத்துக் கொண்டு ஆடுகின்றாளாம் பேய்மகள். எனவே பேய்மகள் துணங்கைக் கூத்தின் வழி முருகனை வணங்குகிறாள் என்பது புலனாம்.

“பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்

அம்பொதிப் புட்டில் விரைஇ குளவியோடு

வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்

நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்

கொடுந்தொழில் வல்லில் கொலைஇய கானவர்

நீடுஅமை விளைந்த தேக்கள் தேறல்

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து

தொண்டகச் சிறுபறைக் குரவை அயர” (திரு.முரு.பா.அடி. 190- 197)

குன்றுகளிலே வாழும் வேடர்கள் மார்பிலே சந்தனம் பூசிக்கொண்டு, தலை மாலையை அணிந்து கொண்டு நீண்ட மூங்கில் குழாய்களில் தேனாலாகிய மதுவை தம் சுற்றத்தாருடன் அருந்தி, தொண்டகம் என்ற சிறுபறையை முழக்கி, குரவைக் கூத்து ஆடி மகிழ்வர். அவர்கள் மத்தியிலே வேலை ஏந்திய ஒருவனும் (வேலன்) ஆடுவதாக உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இங்ஙனமாக வேடுவர்கள் குரவைக் கூத்தின் வழி முருகப்பெருமானை வழிபட்டுள்ளனர் எனத் தெளிய முடிகின்றது. சிலப்பதிகாரமும் குரவைக் கூத்தினை எடுத்தியம்புகிறது.

## வெறியாடல் வழிபாடு

தமிழர் வகுத்த ஐவகை நிலங்களுள் குறிஞ்சிக்குரிய கடவுளாக முருகன் இருந்தமையை, “சேயோன் மேய மைவரை உலகமும்” என்று தொல்காப்பியர் சுட்டிச் சொல்கின்றார். மலைவாழ் மக்களிடையே ‘வெறியாடல்’ என்ற சடங்குமுறை இருந்து வந்துள்ளது.

வெறியாடல் என்பது சங்க இலக்கியங்களைப் பொறுத்தமட்டில் காமத்தால் பீடிக்கப்பெற்ற பெண் மீது முருகன் இறங்கியுள்ளதாக கூறி, அம்முருகனை வெளியேற்றும் பொருட்டு நிகழ்த்தப்படுவதாகும். முருகன் வந்திறங்கிய வேலன் (பூசாரி) என்பான் நடத்தும் ஒரு வித சடங்கு என்று பொருள் கொள்ள இடனாகின்றது." முருகன் என்ற பெயரே கன்னிப் பெண்களைத் தொல்லைப்படுத்தியது" (Sanmugam Pillai, 1999) அதனால் அவர்களுக்கு வெறியாட்டு நிகழ்த்தப்பெற்றது.

"காஅய் கடவுள் சேஎய்! செவ்வேள்!

சால்வ! தலைவ! எனப்பேஎ விழவினுள்

வேலன் ஏத்தும் வெறியும் உளவே" (பரி.பா.அடி. 13- 16)

என்கிறது பரிபாடல். அங்ஙனம் வெறியாடல் நிகழ்த்தப்பெறும் போது ஆட்டுக்குட்டியை பலி கொடுத்து அதன் இரத்தத்தைப் பிரப்பரிசியிலே கலந்து முருகனுக்கு படைக்கப்படுகின்றது.இதனைத் திருமுருகாற்றுப்படையும்

"சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து

வாரணக் கொடியோடு வயிற்பட நிறீஇ" (திரு.முரு.பா.அடி. 218- 219)

என்று குறிப்பிடுகின்றது.

வேத வழிபாடு:

இருபிறப்பாளராகிய அந்தணர்கள் தாம் கற்ற வேத முறைப்படி காருகபத்தியம், ஆகவனீயம், தட்சிணாக்கினி என்னும் மூன்று வகைத்தீயால் வேள்வி செய்கின்றனர். அதில் அவியுணவு படைக்கின்றனர்.

"அறுநான்கு இரட்டி இளமை நல்யாண்டு

ஆறினில் கழிப்பிய அறன்நவில் கொள்கை

மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து

இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல" (திரு.முரு.பா.அடி. 178- 181)

தவிர, மரவுரி உடுத்த, வெறுப்பில்லாத ஞானத்தை உடைய முனிவர்கள் முருகப் பெருமானை வணங்குகின்றனர். இசை வாணர்கள் யாழ் மீட்டித் தம்முடைய இசையால் இறைவனைப் பரவுகின்றனர்.

## குறமகளின் மரபு வழிபாடு

குறமகளின் வழிபாடு மரபு சார்ந்ததாக இருக்கின்றது. சேவல் கொடியை ஏற்றி, அலங்காரம் செய்து, கோயில் வாசலில் நெய்யையும் வெண்சிறுகடுகையும் சேர்த்து அப்புகிறாள். இரண்டு நிறங்களை உடைய உடைகளை உடுத்திக் கொண்டு, கையில் சிவந்த நூலைக் காப்பாகக் கட்டியிருக்கிறாள். பசு மஞ்சளையும் நறுமணப் பொருள்களையும் பல இடங்களில் தெளித்து முருகனுக்கு விருப்பமான துடி, தொண்டகம், சிறுபறை முதலான இசைக்கருவிகளில் குறிஞ்சிப் பண்ணை இசைக்கிறாள். பொரியைத் தூவி வழிபடுகிறாள். ஆட்டுக்கிடாயின் இரத்தம் கலந்த பிரப்பு அரிசியைப் பலி உணவாகப் படைக்கின்றாள்.

"நறும்புகை எடுத்து குறிஞ்சி பாடி

இமிழ் இசை அருவியொடு இன்இயம் கறங்க

உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்

குருதிச் செந்தினைப் பரப்பி குறமகள்

முருகுஇயம் நிறுத்து முரணினர் உட்க

முருகுஆற்றுப் படுத்த உருகெழு வியல்நகர்" (திரு.முரு.பா.அடி. 239- 244)

கொம்புகளை ஊதி மணிகளை ஒலித்து, முருகனின் வாகனமான யானையை வாழ்த்தி வழிபடுகின்ற நிலையும் இருந்துள்ளது.

## கருத்து முரண்கள்

முருக வழிபாட்டில் பல கருத்து முரண்கள் ஆய்வுலகில் இருந்து வருகின்றன." அசைவ உணவை உட்கொண்டவர்களின் கடவுளாக இருந்த முருகனை வேலன் என்று மக்கள் வழிபட்டதாகவும், ஆட்டு இரத்தத்துடன் கலந்த திணை மாவை அவருக்குப் படைத்ததாகவும் அதன்பின் வந்த சமசுகிருத வழிபாட்டு முறையில் முருகன் வழிபாடு சைவ வழிபாடாக மாறியதாகவும்" முனைவர்.சண்முகம்பிள்ளை குறிப்பிடுகிறார் (Sanmugam Pillai, 1999).

போர்த்தெய்வமாகவும் கொற்றவையின் மகனாகவும்முருகன் வழிபடப்பட்டாலும் சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து உதித்தவர். அவருக்கு ஆறுமுகமும் பன்னிரு தோள்களும் உண்டு. திருமால், இந்திரன், அக்னி முதலான தேவர்களால் வழங்கப்பட்ட ஆட்டுக்குட்டி, மயில், கோழிவில், தோமரம், வாள், ஈட்டி, குடாரி, கணிச்சி, மழு, மாலை, மணி முதலியவற்றைத் தம் பன்னிரு கரங்களில் ஏந்தியுள்ளார் (பரிபாடல்).

"திருமுருகாற்றுப்படையில் முருகன் ஆரியக் கடவுளான கார்த்திகேயனுடன் இணைந்தமை தெளிவாகின்றது. முருக வழிபாட்டில் இருவேறு நிலைகளை இந்நூலில் காண்கிறோம். தமிழர்க்கே உரிய பழைய வழிபாடும் வேத வழிபட்ட வழிபாட்டு முறையும் இடம் பெறுதல் காணலாம்" (Dakshinamurthy, 2005)

பரிபாடல், புறநானூறு, அகநானூறு, திருமுருகாற்றுப்படை முதலான சங்க இலக்கியங்களில் காணப்படும் இருவேறுபட்ட கருத்துகளை அகச் சான்றுகளாகக் கொண்டு இன்னும் சில கருத்துகளை ஊகிக்க முடிகின்றது. திருமுருகாற்றுப்படையில் சொல்லப்படும் பலிகொடுத்து வெறியாடும் வழிபாட்டு முறைநாட்டார் மரபாகவும், பிற வழிபாட்டு முறைகள் நாட்டார் அல்லாதோரின் மரபாகவும் இருந்திருக்க வேண்டும். இரண்டு வகைப்பட்ட மக்கள் உலகில் வாழ்தல் இயல்பு தானே.

மேலும், வேலன் என்ற பெயரை முருகப் பெருமானின் பெயராகக் குறித்து வரும் சூழலில், வேலைக் கையிலேந்தி ஆடுபவன் தான் வேலன் எனப்பட்டான் என்றும் கடவுளின் பெயர் முருகன் என்றும் சிலப்பதிகாரம் மற்றும் சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

இவ்விடத்து, போர்க்கடவுள் என்ற முறையிலான வழிபாடு சிறுதெய்வ வழிபாடாகத் தோற்றம் பெற்று, பரவலான மக்களின் வழிபாட்டால் பெருநிலை வழிபாடாக மாறியிருக்கலாம் என்று என்னவும் தோன்றுகிறது. சான்றாக நாட்டுப்புறக் காவல் தெய்வங்களான கருப்பண்ணசாமி, மதுரைவீரசாமி, மலையாளி, கருப்பு, நீலமேக சாமி முதலான திருமால் தொடர்புடைய தெய்வங்களின் வழிபாட்டை ஒப்பிட்டுக் காண வேண்டியுள்ளது. இங்கும் பலி கொடுத்தல், பலியற்ற வேத வழிபாடு என்ற இரண்டு நிலைகள் உண்டு. இதைப் போன்றே சிவ,சக்தி வழிபாடுகளிலும் இரண்டு வகைப்பட்ட வழிபாட்டுச் சடங்குகள் இருக்கின்றன.

## முடிவுரை

முருகனுக்கென்று முதன்முதலில் தனியாக எழுந்த நூல் என்று சொல்லப்படும் திருமுருகாற்றுப்படையில் முருக வழிபாடு குறித்த சான்றுகள் தெள்ளிதின் விளக்கப்பட்டுள்ளன. செய்யோன் என்று அறியப்பட்ட முருகன் காலப்போக்கில் எண்ணற்ற பெயர்களால் அழைக்கப்படும் கடவுளாகிறான். ஒரு குறிப்பிட்ட இனத்தாரின் அல்லது மொழியின் வருகைக்குப் பின்னர் தான் தொன்மை வழிபாட்டு முறை மாறிப்போனது என்ற கூற்று சிந்திப்பிற்குரியது. தற்காலத்து முருக வழிபாட்டில் பலி கொடுத்தல் நிகழ்வு நிகழாமைக்கு காரணம் வள்ளலாரின் கோட்பாட்டுப் பரவல்

என்றும் எண்ண முடிகின்றது. ஆனால், வேலன் வெறியாடல் என்பது வேலன் இறங்குதல் என்றப் பொருளில் சாமியாடுதலாகவும் காவடியாட்டமாகவும் தொடர்ந்து வருதலைக் காண முடிகின்றது.

## References


Dakshinamurthy, A. (2005) Thamizhar nakarigamum panpaadum, Yaazhl Veliyedu, Chennai, India

John Samuvel, G. (1997) Ilakkiya Oppaivu Kalangal, Institute of Asian Studies, Chennai, India

Sanmugam Pillai, M. (1999) Sanga Ilakkiyankalil Murugan Pangudi Ena Veriyattu Valipadu, Institute of Asian Studies, Chennai, India

Sarangapani, R. (2003) Paripadal, Koviloor Madalayam, Koviloor, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License